R5310

# PRAYER THE VITAL BREATH OF THE NEW CREATURE
# ஜெபமானது புது சிருஷ்டிக்கு ஜீவாதார மூச்சு

"சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்."– லூக்கா 18:1

இயேசு சொன்ன உவமையின் கருத்து, "மனிதர்கள் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்" என்பதாகும். எப்படி ஒரு அநீதியான நியாயதிபதி, அதிகமாக தொந்தரவு பண்ணப்பட்டபடியால், கொள்கையைப் பற்றி கவலைப்படாதவனாயிருந்தும் முடிவாக நியாயம் செய்ய தீர்மானித்தான் என்பது குறித்து இந்த உவமை சொல்லுகிறது. இந்த உவமையில் ஒரு ஸ்திரீ, தனக்கு தீங்கு செய்கிறவர்களிடமிருந்து தனக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று தொந்திரவு பண்ணிக்கொண்டிருந்தாள். இந்த விதமாகவே நாம் ஜெபத்தில் தொந்திரவு பண்ண கற்பிக்கப்பட வேண்டும் என்று தம்முடைய ஜனங்கள் சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ணுவதற்காக இதை ஒரு விளக்கமாக கர்த்தர் கொடுக்கிறார். அவர்கள் எப்பொழுதுமே ஜெபம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டும் என்றோ, முழங்காலிலிருந்து எழக்கூடாது என்றோ, ஜெபத்தைத் தவிர வேறு எதையும் செய்யக்கூடாது என்றோ கூறாமல், சோர்ந்து போகாமல், மனம் தளராமல் தொடர்ந்து ஜெபம் பண்ண வேண்டும் என்று கூறுகிறார்.

சரியானபடி ஜெபிக்கவும் தேவனுடைய பிள்ளை எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதையும் அறிய வேண்டும். இல்லையென்றால் அவன் தவறான காரியங்களுக்காக ஜெபித்து, தேவன் அதைக் கொடுக்க விருப்பமில்லாதிருப்பார். ஜெபிப்பதற்கான சரியான காரியங்கள் எவை என்பதை கர்த்தர் நமக்கு அறிவிக்கிறார். பூமக்குரிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்தில் இருக்கிற பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளு –கிறவர்களுக்கு நன்மையானவைகளை கொடுப்பது எவ்வளவு நிச்சயம். பூமிக்குரிய பிதாக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பூமிக்குரியவைகளை கொடுக்கிறார்கள். பரலோகத்தில் இருக்கிற பிதா தம்முடைய பிள்ளைகளுக்கு பரலோக காரியங்களைத் தருகிறார். உலகத்தின் மனுக்குலம் தேவனை பிதா என்று அழைக்க அனுமதிக்கப்படவில்லை. தேவனுடன் திரும்ப உறவுக்குள் வருவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அந்த வழியை இயேசு தமது மரணத்தினால் திறந்தார்.

இயேசுவுக்கு முன்னர், தேவனுடைய யூத பிள்ளைகள் வந்து மரிக்கவில்லையா? நாம் இல்லை என்று பதிலளிக்கிறோம். தேவனுடைய கிருபை மிகவும் அதிகமாக காண்பிக்கப்பட்டது ஆபிரகாமுக்கு ஆகும். அவர் தேவனுக்கு சிநேகிதன் என்று மட்டுமே அழைக்கப்பட்டார். "மோசே, பணிவிடைக்காரனாய் அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான்." உண்மையில்லாதிருந்த யூதர்கள் பணிவிடைக்–காரர்களாகக் கூட இல்லை. ஆனால் இயேசு வந்தபோது, சிலரை வீட்டின் பணிவிடைக்காரரிலிருந்து வீட்டின் குமாரர்களாக ஆக சாத்தியமாக்கினார். "அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார். அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.... அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்." (யோவான் 14:11,18) இந்த சலுகை உடனடியாக கொடுக்கப்படவில்லை. ஆனால் இயேசு அவரது ஓட்டத்தை முடித்து, பரலோகத்திற்கு எழுந்தருளி. பரிசுத்த ஆவியை தமது சீஷர்களுக்கு ஊற்றும் வரை இந்த சலுகை கொடுக்கப்பட்டதாக கருதப்பட்டது. அதன்பிறகு தான் தேவனுடைய பிள்ளைகளாகும்படி சலுகை கொடுக்கப்பட்டது.

சுவிசேஷ யுகம் முழுவதும் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும்படி சலுகை பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தைகளில் சொல்லப்பட்டுள்ள அனைத்து வாக்குத்தத்தங்களும் இவர்களை சார்ந்ததாயிருக்கிறது. இந்த வகுப்பாரில் யூதர்கள் மாத்திரமல்ல, புறஜாதிகளும் இருக்கிறார்கள். யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட கிருபையின் காலம் முடிந்தபிறகு புறஜாதிகளுக்கும் கதவு திறக்கப்பட்டிருந்தது. இப்படியாக நாம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகவும், தேவனுடைய பிள்ளைகளாகிய இந்த வகுப்பாருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த சகல காரியங்களுக்கும் சுதந்தரராகவும் ஆகியிருக்கிறோம். நாம் ஜெபத்தில் தேவனிடம் செல்லும் போது, அது புது சிருஷ்டிக்குரிய ஜெபத்தின் சலுகையாக இருக்கிறது. பழைய சிருஷ்டியாக இருப்பது நிறுத்தப்பட்டு. புது சிருஷ்டியாக ஆகவில்லை என்றால் ஜெபிக்கும் சலுகை கிடையாது. இதில் புது சிருஷ்டியான பெற்றோர்களின் பிள்ளைகள் மட்டுமே விதிவிலக்கு. தேவனுடைய கிருபை அவர்களுக்கு இருப்பதற்கு காரணம் அவர்களது பெற்றோர்களின் ஆவிக்குரிய அக்கறையினால் மட்டுமே.

## புது சிருஷ்டிகளின் மாபெரும் தேவை

நமது தலைப்பு வசனம், புது சிருஷ்டிகள் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும் என்று கூறுகிறது. இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் பழைய ஏற்பாட்டுகால தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை இவர்கள் ஆராய்ந்து எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்கள். ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் இப்படியாக தேவனுடைய பிள்ளைகளின் சலுகைகளும் உரிமைகளும் என்ன என்பதை அறிந்து கொள்ளுவார்கள். பூமிக்குரிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கும் நல்ல ஈவுகளைக் காட்டிலும் மேலான பரிசுத்த ஆவியை பரலோக பிதா தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்க விருப்பமுள்ளவராயிருக்கிறார். (மத்தேயு 7:11)

புது சிருஷ்டிக்கு தேவைப்படுகிற ஒன்று பரிசுத்த ஆவியாகும். புது சிருஷ்டியானது புதிய சுபாவத்திற்குரிய. கனம், மகிமை. சாகாமைக்குரிய சோதனையில் இருக்கிறது. இவைகளுக்காக பாத்திரராயிருப்பவர்கள் மாத்திரமே அதை பெற்றுக்கொள்ளக்கூடும். பூமிக்குரிய உத்வேகத்தை குறைத்து, அழித்து, ஆவிக்குரிய உத்வேகத்தை விளைவுபடுத்தும் நிபந்தனைகள் மூலம் அவன் பிதாவானவருடன் ஆவிக்குரிய உறவை பெற்றிருக்கிறான். ஆகையால் அவன் தன்னை புது சிருஷ்டியாக பலப்படுத்தி, புது சிருஷ்டியாவதற்கு தேவனுடைய பரிசுத்த ஆவி அவனுக்கு தேவைப்படுகிறது. இதன் விளைவாக தேவன் இதை நமக்கு அளிக்க விருப்பம் உடையவராக இருக்கிறார். நாம் அதை கேட்பதில் சந்தோஷம் அடைகிறார். பூமிக்குரிய விருப்பங்கள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்று பொருளல்ல. நம்முடைய ஆவிக்குரிய நலன்களுக்கு நமக்கு என்ன தேவை என்பதை பரம பிதா அறிந்திருக்கிறது போல, பூமிக்குரிய நலன்களுக்கு என்ன தேவை என்பதை அவர் அறந்திருக்கிறார். தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேதாகமத்தில் நமக்கு தேவையான வழிமுறைகளை கொடுத்திருக்கிறார் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நாம் கிருபையிலும் அறிவிலும் அவரது ஆவியிலும் வளருவதால் நாம் மேன்மேலும் ஞானத்தில் வளரும்படி இந்த வார்த்தை செய்கிறது. இதன் மூலம் ஏற்ற காலத்தில் நாம் ஜெபத்தில் எதை கேட்க வேண்டும், எதை கேட்கக்கூடாது என்பதை நாம் அறிவோம். நமது அனுபவத்தின் ஆரம்பத்தில் இதை அந்த அளவுக்கு அறியமாட்டோம். புறஜாதிகள், அவர்கள் அதிகமாக பேசுவதால் அவர்களது ஜெபம் கேட்கப்படும் என்று எண்ணி திரும்பத்திரும்ப சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஜெபத்தைக் குறித்து தேவன் கூறுகிறார். அவர்களது ஜெபம் சொன்னதையே திரும்பத்திரும்ப சொல்வதால் வீணாகிறது. முதலாவது வேண்டுதல் வீணாகிறது. அதைத் தொடர்ந்து வருகிற அனைத்து வேண்டுதல்களும் வீணாகிறது. ஏனெனில் இவையனைத்தும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஜெபத்திற்கு அடிப்படையானதாக இல்லை.

## நோக்கம் ஒரு முக்கியமான கருத்து

கிறிஸ்துவுடன் பலியின் உடன்படிக்கைக்குள் வந்திருக்கிற அனைவரும் ஜெபிக்கும் உரிமையை பெற்றிருப்பதை உணரக்கூடும். எதற்காக அவர்கள் ஜெபிக்கலாம்? அவர்கள் பூமிக்குரிய காரியங்களுக்காக ஜெபிக்கமாட்டார்கள். அவர்களுக்கு நன்மைக்கு ஏதுவில்லாத வேண்டுதல்களை பரமபிதா பதிலளிக்க மாட்டார். முக்கியமான வேண்டுதல்களை ஏறெடுக்கிற சிலரைக் குறித்து பரிசுத்த யாக்கோபு பேசுகிறார். அவர் கூறுகிறதாவது: "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டும் என்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளா –மலிருக்கிறீர்கள்." (யாக்கோபு 4:3)

இங்கே உலக இச்சை என்பது ஆசைகளை குறிப்பிடுகிறது. நாம் பூமிக்குரிய ஆசைகளை நிறைவேற்றும்படி கேட்கக்கூடாது. உதாரணத்திற்கு, ஒரு பத்து லட்சம் டாலர் பணத்தை அனுப்பும்படியும், அதை என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவருடைய வேலைக்கு எப்படி பயன்படுத்துவது என்பதையும் நாம் அறிவோம் என்று கூறி ஜெபிக்கலாம். தேவன் அதை கொடுக்காமலிருக்கலாம். ஏனெனில் நாம் அதை தவறாக கேட்டிருக்கலாம், ஆனால் நாம் அதை ஞானமாக கேட்டோம் என்று நினைக்கலாம். நாம் கர்த்தரிடம் கேட்கும் போது, அதன் நோக்கம் தனித்தன்மையுடன் இணைந்திருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம்முடைய காரியத்தில் நாமே கேட்டுப்பார்க்க வேண்டும். பத்து லட்சம் டாலரை கேட்பது, அதை பயன்படுத்தி நாம் பிரகாசிப்பதற்காகவா? அப்படியிருந்தால் அந்த ஜெபம் மொத்தத்தில் சரியானது அல்ல. அப்படிப்பட்ட ஜெபத்தை நமது கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்பத்தில் நாம் ஏறெடுப்போம். அதற்காக பிதாவானவர் நம்மிடம் கோபித்துக்கொள்ளமாட்டார். பெரியவனானபோது நாம் மன்னிக்காத காரியத்தை, குழந்தை செய்யும்போது மன்னிப்போம்.

இந்த ஜெபத்தைக் குறித்து நமது கர்த்தர் ஒரு காரியத்தை நமக்கு நினைவுபடுத்துகிறார். "நீங்கள் என்னிலும், என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ, அ து உங்களுக்கு செய்யப்படும்." (யோவான் 15:7) எப்படிப்பட்ட பரந்த கூற்று இது! நாம் எதை வேண்டுமென்றாலும் கேட்கலாம் என்று முதலில் நமக்கு தோன்றும். ஆனால் அது குறிப்பிட்ட எல்லைகளை உடையதாக இருக்கிறது. இப்படியாக ஜெபம் பண்ணக்கூடியவர்கள் யார்? இவர்கள் முன்னரே அவரது சரீர அங்கங்களானவர்கள், தங்களை முழுமையாக அர்ப்பணம் செய்தவர்கள், பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலை பெற்றவர்கள். மேலும் நிலைத்திருத்தல் என்ற வார்த்தை இந்த உறவுக்குள் நுழைவதை மாத்திரமல்ல. அங்கே தரித்திருப்பதை, தங்கியிருப்பதை குறிக்கிறது. அவர்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அவருடன் நிலைத்து நிற்பவர்கள்.

"என் வார்த்தை உங்களில் நிலைத்திருந்தால், தேவனுடைய வார்த்தை நம்மில் நிலைத்திருத்தல் என்பது நாம் தேவனுடைய வார்த்தையின் அறிவை பெற்றிருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்டுகிறது. நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை அறிவதற்கு தேவனுடைய வார்த்தையை ஆராய்வதை இது அவசியமாக்குகிறது. நாம் அவசரமாக ஜெபித்து ஒரு பெரிய தவறை செய்துவிட்டு, நான் தவறு செய்துவிட்டேன். தவறான காரியங்களை கேட்டுவிட்டேன் என்று சொல்லக்கூடாது. இதைக் குறித்து தேவனுடைய வார்த்தைகள் என்ன சொல்லுகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். யாராவது தேவனுடைய வார்த்தையில் நன்கு பரிச்சயமாகியிருந்தால், தனது ஜெபத்தை பரிசுத்தப்படுத்தக் கூடிய நிபந்தனைகளை சந்தித்துவிட்டேனா இல்லையா என்பதை அவர் அறிந்துகொள்ள வேண்டும். இந்த நிலைமைக்கு வந்த பிறகுதான் சந்தேகமில்லாமல் தனது வேண்டுதல்களை தொடரலாம். அதன் பிறகுதான் தனது வேண்டுதல்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதை அறிந்து கொள்வார். நாம் கேட்கக்கூடிய சில காரியங்கள் என்ன?

## ஜெபத்தில் கேட்கவேண்டிய சில காரியங்கள்

தேவனுடைய ராஜ்யம் வரவேண்டும் என்பது நாம் ஜெபிக்க வேண்டிய காரியங்களில் ஒன்று. நாம் தொடர்ந்து கிருபாசனத்தண்டைக்கு சென்று, தேவன் பூமியிலே ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்த சித்தங்கொண்டிருக்கிறார் என்பது குறித்து பாராட்டலாம். சந்தேகம் இல்லாமல் ராஜ்யத்திற்காக ஜெபிக்கலாம். வேறெதற்காக நாம் ஜெபிக்கலாம்? "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று நாம் ஜெபிக்கலாம். ஆனால் இது மாம்சத்திற்குரிய உணவு அல்ல. இது அத்தியாவசிய தேவை. நமது தேவைகளுக்கு ஜெபிக்கும்படி கர்த்தர் நமக்கு உத்தரவாதம் அளித்திருக்கிறார். சிறந்ததை பெற நாம் தீர்மானிக்க வேண்டும். நமது முயற்சிகளை மட்டுமே நாம் நம்பக்கூடாது. கர்த்தருடைய மேற்பார்வையையும் நாம் நம்ப வேண்டும். ஆகையால் உலகப்பிரகார விநியோகம் குறைவாக இருந்தால், நாம் சிக்கனம் என்ற பாடத்தை கற்றுக்கொண்டு நாம் பெற்றிருப்பதை பராமரித்துக் கொள்ள வேண்டும்.

நாம் ஊதாரித்தனமாக இல்லாதபடி நாம் வாழ்க்கையில் சீக்கிரத்தில் கற்றுக்கொள்ள வேண்டும். இயேசு அப்பத்தையும் மீனையும் திரளானவர்களுக்கு அளித்த போது, மீதியானதை கூடைகளில் எடுத்து வைக்கும்படி கட்டளையிட்டு, பொருளாதாரத்தை விளக்கினார். நாம் பெற்றிருப்பது ரொட்டியும் தண்ணீரும் அல்லது உருளைக்கிழங்கும் உப்பு மட்டும் என்றால் நாம் அதை நன்றியுடன் சாப்பிட வேண்டும். நமக்கு தேவையானதை மட்டுமே கேட்க வேண்டும். தின்பண்டத்தையோ, கேக்கையோ. ஐஸ்கிரீமையோ கேட்கக்கூடாது. தேவன் நமக்கு ஆடம்பரமானவைகளை நிறுத்திவிட்டு. நமக்கு தேவையை மட்டும் கொடுத்தால் நாம் நன்றியுடனும் திருப்தியுடனும் இருக்க வேண்டும். ஆனால் நாம் ஜெபிக்க வேண்டும், பயப்படக்கூடாது

நாளைக்கு நமக்கு எதுவும் கிடைக்கவில்லை என்றால் என்ன? இன்றைக்கு எதையாவது வீணாக்கினாயா? இன்றைக்கு தேவையானதைக் காட்டிலும் இரண்டு மடங்காக சாப்பிட்டாயா? அப்படியென்றால் கர்த்தர் உனக்கு ஒருவேளை சில பாடத்தை கற்றுக்கொடுக்கலாம். அது உனக்கு புது சிருஷ்டிக்கு நல்லதாக இருக்கும். நீ ஞானத்தையும் சிக்கனத்தையும் கடைபிடித்தால், தேவையானவைகளை அவர் தருவார். தீர்க்கதரிசி கூறுகிறதாவது: "அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய் கிடைக்கும்." (ஏசாயா 33:16)

தீமைகளிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி நாம் ஜெபிக்கலாம். இது தீயவன் ஒருவன் இருக்கிறான் என்பதையும் அவனுடைய தாக்குதல்களை எதிர்த்து நாம் ஜெயங்கொள்ள நம்மால் முடியாது என்பதையும் காணும்படி வழி நடத்துகிறது. எல்லா நேரங்களிலும் கர்த்தரின் உதவி நமக்கு தேவைப்படுகிறது. நாம் சோர்ந்து போகாமல் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.

நாம் நமது மீறுதல்களை மன்னிக்கும்படி ஜெபிக்கலாம். நமது கர்த்தர் மாதிரி ஜெபத்தில் நமது அனுதின மீறுதல்களை மன்னிக்கும்படி குறிப்பிடுகிறார். இந்த மீறுதல்கள் நமது மாம்சீக பலவீனத்தினால் உண்டானவை. இன்றைய நமது மாம்சீக மீறுதல்கள் பத்து வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு அல்லது ஒரு வருடத்திற்கு முன் இருந்ததைக் காட்டிலும் மிகவும் குறைவாக இருக்க வேண்டும்.

நாம் ஜெபத்தில் ஒரே மாதிரியான வார்த்தைகளை பயன்படுத்தாமலிருப்பது நல்லது. ஆவியின் விருப்பங்களை நாம் முன்னரே சிந்திக்க வேண்டும். அதாவது அதிகமான விசுவாசம், அதிகமான பொறுமை, அதிகமான சாந்தம், அதிகமான அன்பு இவைகளை நாம் கேட்கலாம். நாம் தெய்வீக பராமரிப்புக்காக நன்றி சொல்லி. அது தொடரும்படி மன்றாடலாம். இப்படிப்பட்ட ஜெபம் எளிமையாக இருந்தாலும் இதை பரலோக பிதா விரும்புவார். வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஜெபங்கள் பொதுவாக நீண்டவைகளாக இல்லை. ஜெபத்தில் நமது நல்ல எண்ணங்களை, மனோபாவத்தை, நமது நாவு வெளிப்படுத்துகிற வார்த்தைகளை தேவன் ஏற்றுக்கொள்ளுகிறார்.

நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களின் மற்ற கூற்றுகள், நாம் மதிமயக்கத்தில் வளரக்கூடாது என்று குறிப்பிடுவதாக காணப்படுகிறது. நாம் ஒரு குறிப்பிட்ட காரியத்தை ஜெபித்தில் கேட்ட பிறகு. ஜெபம் உடனே கேட்கப்படாததால். தேவன் அதை கேட்கவே மாட்டார் என்பதை முடிவு பண்ணக்கூடாது. இது குறிப்பிட்ட, தனிப்பட்ட காரியங்களுக்கு பொருந்துவதாக காணப்படுகிறது. தேவையான உதவியை பெறுவதற்கு அடிக்கடி கிருபாசனத்தண்டைக்கு வந்து, நமது வாழ்க்கையில் சகல காரியங்களிலும் ஜெபத்தின் அனுகூலத்தை நமது மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை நமது தலைப்பு வசனம் உள்ளடக்கியிருப்பதாக காணப்படுகிறது.

## ஜெபத்தின் தத்துவம்

தேவனிடம் நாம் கேட்கவில்லையென்றால் அவர் நம்மை மறந்துவிடுவாரா? ஒரு பிதாவாக செய்ய வேண்டியதை புறக்கணிப்பாரா? அப்படி இல்லை என்று வேதவாக்கியங்கள் பதிலளிக்கின்றன. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக அபரிதமான ஏற்பாடுகளை செய்திருக்கிறார். தேவனுக்கான பயபக்தியும் ஜெபத்திற்காக விருப்பமும் நமது சுபாவத்தில் வைக்கப்பட்டுள்ள உயர்ந்த குணலட்சணமாக இருக்கும்படியாக நாம் அமைக்கப்பட்டிருக்கிறோம். முக்கியமான உறுப்புகளும் ஆன்மீகமும் நமது தலையின் மேல் பகுதியில் இருக்கிறது. இந்த உயர்ந்த குணங்களை அப்பியாசப்படுத்தி அனுபவிக்காதவர்கள் வாழ்க்கையிலிருந்து சரியான ஆசீர்வாதங்களை பெறவில்லை. சொல்லப்போனால். சிலர் அவர்களது மூளையின் வரவேற்பறையில் வசிப்பதற்கு பதிலாக கட்டிடத்தின் அடித்தளத்தில் வசிக்கிறார்கள். தலையின் உயர்ந்த மனோசக்திகளை அப்பியாசப்படுத்துவது மூலமே நமக்கு உண்மையான சந்தோஷம் வருகிறது. இங்கே, உயர்ந்த காரியங்களைக் குறித்து, உன்னதமான காரியங்களைக் குறித்து, சிறந்த காரியங்களைக் குறித்து தேவனுடன் பேசமுடியும்.

சிலரது இயற்கையான சுபாவம் மனித மனதின் உயர்ந்த குணங்களை குறித்து இல்லாமல் அடிப்படை குணங்களைக் குறித்தே இருக்கிறது. மற்றவர்களது சுபாவம் உயர்ந்த உணர்வுகளைக் குறித்து இருக்கும். ஆனால் எல்லாருமே அபூரணர்கள் தான். யாராவது பாவத்திலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவின் பள்ளிக்குள் வந்தால் அவர்கள் ஜெபிக்கும்படி போதிக்கப்படுகிறார்கள். ஏனெனில் இது அவர்களது இயற்கையான இணைந்த மனோ சக்திகளிலிருந்து உயர்ந்த பலன்களை அடைய சாத்தியப்படுத்தும். அவர்கள் தொடர்ந்து ஜெபத்தில் கர்த்தரிடத்தில் வந்து, தங்களது சொந்த மனதில் உயர்ந்த குணங்களை பதிவு செய்கிறார்கள். இப்படியாக புது சிருஷ்டி, பழைய சுபாவத்தின் உயர்ந்த மனோ சக்திகளை பயன்படுத்தி. மாம்சீக பலவீனத்திலிருந்து வளர்க்கப்பட்டிருக்கிற இயற்கையான பழக்கங்களிலிருந்து பழைய சிருஷ்டியை சீர்திருத்தச் செய்யும்.

## ஜெபத்தின் புறக்கணிப்பை அழிவு தொடரும்

ஜெபத்தின் மூலம் ஒரு மாபெரும் ஆசீர்வாதம் வருகிறது!. ஜெபம் புறக்கணிக்கப்பட்டால் ஒரு குறிப்பிட்ட அளவான நாச நோய் உள்ளே வருவதை நாம் காண்கிறோம். அதே சமயம் புது சிருஷ்டி ஜெபத்தில் கர்த்தரிடம் வருவதைத் தொடர்ந்தால். இப்படியாக புது சிருஷ்டி மனதின் உயர்ந்த உறுப்புகளை பயன்படுத்துகிறது. அது உயர்ந்த குணங்களை கொண்டு வருகிறது. இது சத்தியத்தையும் நீதியையும் உண்டாக்கும், புது சிருஷ்டியை வளரச் செய்யும். மேலும் புது சிருஷ்டியானது மூளையின் உயர்ந்த உறுப்புகளை பயன்படுத்தி குணலட்சண அமைப்பையும் கர்த்தரின் ஊழியத்தையும் முன்னேறச் செய்யும்.

ஜெபமானது புது சிருஷ்டியின் உயிர் முச்சாக இருக்கிறது. ஜெபிக்க வேண்டும் என்கிற கர்த்தரின் போதனையை

உறுதிப்படுத்தினாலொழிய பழைய சரீரங்களை கட்டுப்படுத்தவோ, அவற்றிலிருந்து நன்மைகளை பெறவோ இயலாது. பூரணராக இருந்த நமது கர்த்தருக்கு ஜெபமானது சொந்தமாக இருந்து, அவர் பிதாவிடம் அடிக்கடி ஜெபத்தில் போக வேண்டியது அவசியமாக இருந்ததால், நாமும் கர்த்தரிடம் ஜெபத்தில் செல்வது அவசியமாக இருக்கிறது. இதன்மூலம் நாம் நமது சிந்தைகளை புதுப்பித்து மேன்மேலும் மறுரூபமாக்கப்படுவோம். நாம் எப்பொழுதுமே முழங்காலில் இருக்க வேண்டும் என்று பொருளல்ல. ஆனால் நாம் தொடர்ந்து அவரிடம் போக வேண்டும். முடிந்தால் குறைந்த பட்சம் இரவிலும் காலையிலும் நாம் போக வேண்டும்.

சிலர் ஜெபிக்கும் போது நின்று கொண்டிருப்பதை விரும்புவார்கள்; சிலர் முழங்காலில் இருப்பதை விரும்புவார்கள்; சிலர் கண்ணை திறந்து வைத்திருப்பார்கள்; சிலர் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறார்கள். இவை அனைத்திலும் நாம் முடிவெடுக்கும்படி தேவன் விட்டுவிடுகிறார். ஆனால் தேவனுடனான அனுகுமுறை தினமும் இருக்க வேண்டும். விசேஷித்த ஜெபகாலம் என்று மட்டும் நாம் வைக்காமல், ஜெப ஆவியை நாம் பெற்றிருக்க வேண்டும். அது நமது வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் இருக்க வேண்டும். நாம் வாழ்க்கையின் கடமைகளில் செல்லும் போது நான் இப்பொழுது தேவனுடைய சித்தத்தையும் வழியையும் பார்க்கிறேன் என்று எண்ண வேண்டும். இந்த காரியத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் மறுபடியும் ஜெபிப்பதை நிறுத்தாமல். கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும். இப்படியாக அந்த நாளுக்குரிய அனைத்திலும் கர்த்தருடைய ஆசீர்வாதத்தையும் வழி நடத்துதலையும் நாம் பெறுவோம்.

சிலர் தேவனுடைய வழி நடத்துதலை பெரிதாக எடுத்துக் கொள்ளாதபடி என்ன செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்று கூறுவார்கள். எனக்கு யாரும் சொல்லித் தர வேண்டியது இல்லை. கர்த்தராக இருந்தாலும் அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி. அப்படிப்பட்டவர்கள் தாங்களே வளர வேண்டும் என்ற சுபாவம் உடையவர்களாக இருப்பார்கள்; மற்றவர்களது யோசனையை நாடமாட்டார்கள்.

ஆனால் தேவனுடைய பிள்ளை, ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு கிரியையிலும் ஒவ்வொரு வார்த்தையிலும் தேவனுடைய அங்கீகாரத்தை பெறும் சலுகையை உணர வேண்டும். நாம் செய்கிறது தேவனுடைய வேலை, நம்முடைய வேலை அல்ல. இன்றைக்கு அதை ஒருவழியில் பண்ணுகிறபடியால் அதே விதமாகவே எப்பொழுதும் பண்ண வேண்டும் என்ற அவசியமில்லை. சில காரியங்கள் மலைகளைப் போல நிரந்தரமாக இருக்கக்கூடியது, மற்றவைகள் அல்ல. நமது அனுபவத்தைப் பொருத்து இருக்கிறது. கர்த்தர் இன்றைக்கு ஒரு அனுபவத்தையும் நாளைக்கு ஒரு அனுபவத்தையும் கொடுக்கலாம். இன்றைக்கு அவர் நம்மை அமர்ந்த தண்ணீரிலும் புல்லுள்ள இடங்களிலும் வழி நடத்தலாம். நாளை அது முள்ளுள்ள மற்றும் கரடுமுரடான இடமாக இருக்கலாம். இப்படியாக ஒவ்வொரு நாளும் நாம் அறிவிலும் அன்பிலும் வளருகிறோம். நமக்கு எந்தவித அனுபவம் வந்தாலும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

"திரளாக நான் எதைக்கண்டாலும் திருப்தி அடைகிறேன். ஏனெனில் தேவனுடைய கரமே என்னை வழி நடத்துகிறது."